Registared as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (27 - 03 - 1991) புதன்கிழமை ஓசை: 37

## பரீட்சார்த்திகள் வசதிக்கு வழிவகை செய்யவும்

(கொழும்பு)

நடக்கவிருக்கும் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை, மற்றும் க. பொ. த (உயர்தரம்) பரீட்சைகளில் பரீட்சார்த்திகள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் அவர்களைப் பரீட்சைக்குத் தோற்ற வழிவகைகளை மேற்கொள்ளும்படி பரீட்சைப் பகுதி ஆணையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், வடக்கு கிழக்குக் கல்விப் பணிப்பாளர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர்களும், பெண்களுமாக

# ஏழு தமிழர் திருமலையில்

# ராணுவத்தால் கொலை

[திருமலை]

திருமலை மாவட்டத்தில் பல கிராமங்களைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பெண்களையும், வயோதிபர்களையும் சுட்டுக்கொன்றனர்.

கடந்த பதின்மூன்றாம் திகதி மட்டப்புக்களி, இலக்கந்தை, நல்லூர் ஆகிய மூன்று இராமங்களையும் கட்டைபறிச்சான் முகாமிலிருந்து வெளியேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர். இந்த சுற்றி வளைப்பின்போது அவர்களது வீடுகளில் இருந்த திருமதி தப்பிராசா தெய்வானை (வயது 50), கதிர்காமத்தம்பி வீரலிங்கம் (வயது 38), வீரசிங்கம் தேவகி (வயது 30), ஆகிய பூனகரைச் சேர்ந்தவர்களையும் புண்ணியமூர்த்தி ராஜேஸ்வரி (வயது 40), வெருகல் முத்துவாரம், கணபதிப்பிள்ளை மயில்வாகனம் (வயது 67) மாவடிச்சேனை, ஆகிய ஐவரையும் வெளியே இழுத்து சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அதே கட்டைபறிச்சான் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அடுத்த நாள் பதினான்காம் திகதி மட்டப்புக்களி கடற்கரையில் வைத்து ஒரு அ (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

### சிரஞ்சீவி

முல்லைத்தீவு இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிரஞ்சீவி வீரமரணம் அடைந்தார். மனோகரன் என்ற இயற் பெயரைக்கொண்ட இவர் உடப்பு புத்தளத்தைச் சேர்ந்தவர். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் சே. கந்தையா (4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு ஓடுங்கோ புத்தகம் தரமுடியாது

(யாழ்ப்பாணம்)

"நீங்கள் மட்டக்களப்புக்கு ஓடுங்கோ இலவசப் புத்தகம் உங்களுக்கு கிடைக்காது நாளைக்கு இங்கு வந்தால் உங்களைத் துலைப்பேன்'' என்று கூறி யாழ். மாவட்டத்தில் ஒரு பாடசாலை அதிபர் மட்டக்களப்பிலிருந்து இராணுவ ஆக்கிரமிப்புக்கு அஞ்சி இங்கு வந்து தஞ்சமடைந்த இரண்டு இருவர்களை துரத்தியுள்ளார்.

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியிலிருந்து உறவினருடன் இங்கு வந்து தஞ்சமடைந்த பூபாலபிள்ளை பிரேமானந்த் (வயது 6), இன்பராசா சசிகலா (வயது 8) ஆகிய இருவர்களும் கடந்த இரு மாதங்களாக கல்வி பயின்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா விமானப்படை தாக்கி இராணுவ கவச வாகனம் சேதம்

(கொழும்பு)

சிறிலங்கா விமானம் தாக்கியதில் படைகளுக்குச் சொந்தமான கவசவாகனம் ஒன்று வவுனியாவில் சேதப்பட்டது. அதில் பிரயாணம் செய்த ஆறு இப்பாய்களும் கொல்லப் பட்டதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி லக்ஷ்மன் இரியல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புலிகளின் வாகனம் என்ற எண்ணத்தில் விமானப்படை கவச வாகனத்தைத் தாக்கியதாம் பேசிய தொடர்புச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிக்கிய ட்ரக் வண்டி சிதறியது

(திருகோணமலை)

திருமலை மாவட்டம் பாலம்போட்டாறு இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவ ட்ரக்வண்டி ஒன்று விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி முற்றாக சேதமடைந்தது. அதில் பயணம் செய்த இராணுவத்தினர் பலத்தசேதத்திற்கு உள்ளாயினர்: இத் தாக்குதலை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

நேற்றுக் காலை எட்டுமணி ஐந்து நிமிடமளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக திருமலையில் இருந்து எமக்குக் கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலம்போட்டாறு இராணுவ முகாமிலிருந்து இராணுவ வாகனங்கள் வெளியேறி கொழும்பு வீதியால் வந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டபம் அகதிமுகாமில் 3 பெண்களை காணவில்லை

(திருச்சி)

இராமநாதபுரம் மண்டபம் அகதி முகாமில் இருந்த மூன்று பெண்களைக் காணவில்லை என்று இராமநாதபுரம் காவல்துறையினருக்கு புகார் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன மூன்று பெண்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் என்று அவர்களது சகோதரர் கொடுத்துள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இது தொடர்பாக இராமநாதபுரம் காவல் துறையினர் வழக்கொன்றை தொடுத்துள்ள அதேநேரம் விசாரணை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## இலங்கைத் தமிழர் இருவருக்கு நோர்வேயில் 3 மாத சிறை

(ஒஸ்லோ)

இலங்கைத்தமிழர் இருவருக்கு நோர்வே நீதிமன்றம் மூன்று மாதச் சிறைத் தண்டனை விதித்துள்ளது. மூன்று இலங்கைத்தமிழ் இளைஞர்களைச் சட்டவிரோதமாக நோர்வேக்குள் கடத்திவந்த குற்றத்திற்காகவே இவர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி போலி விசாக்களுடன் இவர்கள் மூன்று தமிழ் இளைஞர் சகிதம் டென்மார்க்கிலிருந்து வழியாக நோர்வேக்குள் நுழையும்போதே (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயர் மீதான தாக்குதல் அரச பயங்கரவாதத்தின் விளைவே

(யாழ்ப்பாணம்)

''மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வவுனியாவில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் ஒரு தனிப்பட்ட விடயம் அல்ல, குற்றம் விளைவிக்காத பொதுமக்கள்மேல் படையினர் கட்டவிழ்த்துவிடும் வன்முறை, அரச பயங்கரவாதத்தின் எடுத்துக்காட்டே'',

யாழ் - ஆயர் இல்லத்தில் நேற்று முன்தினம் (25-3-91) திங்கள் காலை 9 மணிக்குக் கூடிய 56 குருக்கள் ஏகோபித்த குரலில் மேற்கண்ட கண்டனத்தைத் தெரிவித்தனர்.

56, குருக்களும் கையெழுத்திட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 100 தங்க பிஸ்கட்டுகள் கடத்திய தமிழர் கைது

(கொழும்பு)

எயர் லங்காவின் பிரயாணிகளின் சௌகரியங்களைக் கவனிக்கும் ஊழியர் ஒருவர் ரூபா 70 இலட்சம் பெறுமதியான 100 தங்க பிஸ்கட்டுகளை இலங்கைக்குள் கடத்த முயன்ற சமயம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

11.65 கிலோ கிராம் எடையுள்ள மேற்படி தங்கத்தைச் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். திருகோணமலையில் வசிக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூர் விமானத்தை பாகிஸ்தானியர் கடத்தினர்

கோலாலம்பூர்-சிங்கப்பூர் சேவையில் ஈடுபட்டிருந்த சிங்கப்பூர் எயர் லைன்ஸ் விமானம் நேற்று கடத்தப்பட்டது. கடத்தல்காரர் விமானத்தை சிங்கப்பூர் விமான நிலையத்தில் தரையிறக்கியுள்ளனர். விமானத்தில் 11 ஊழியர்களும், 118 பயணிகளும் சிங்கப்பூர் விமான நிலைய முறையொன்றில் பணயக்கைதிகளாகக் கடத்தல்காரர்களால் வைக்கப்பட்டுள்ளனர்.

விமானத்தைக் கடத்தியவர்கள் நான்கு பாகிஸ்தான் பிரஜைகள் ஆகும். கடத்தலுக்கான நோக்கம் உடனடியாகத் தெரியவில்லை.

# முத்தமிழ் விழா ஏப்ரல் முதல் 15 வரை

## வரிவிளம்பரம்

**கொழும்பு ஸ்ருடியோ**

புளொக் (Block) புகைப்படம், றபர் சீல, கலர்படம், ஓவியம் பிறேம்போடுதல், கலர் பிலிம், சுவுன், ஸ்ரிக்கேஸ் முதலியனவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.
(B/2090)

**தேவை**

பாவித்த சம்போ, ஒடிக்கோலன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா. சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும். எஸ்: சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம்.
(B. 2169)

**நியுவெஸ்ரோன் எலக்ரோனிக்ஸ் கோப்**

ரீ. வி. டெக். றேடியோ. மணிக்கூடு, துவிச்சக்கரவண்டி மற்றும் எல்லா உபகரணங்களும், திருத்துபவர்களும், விற்பனையாளர்களும், வீடியோ, வீடியோ படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய மாடல்களும் (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(B - 2102)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**S.F.யோசவ்**
(வீரக்கோன்)

ஓய்வுபெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர் (மலேசியா, தடைப் பகுதி யாழ்ப்பாணம்)

மலர்வு: 23-1-1921
உதிர்வு: 26-02-1991

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 27-03-91 புதன்கிழமைகாலை 7.30 மணிக்கு கோப்பாய் மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றிச் செபிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய்.
(R/1214)

## முக்கிய அறிவித்தல்

ஆர். வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறியவந்துள்ளோம். போலி ஆர் வி ஜி பீடிகள் விலையிலும் தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகிறோம். அசல் ஆர். வி ஜி பீடிகளை எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர் வி. ஜி பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள். போலி ஆர். வி. ஜி பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

ஆர்: வி: ஜி நிர்வாகம்
58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
(B-2179)

## இடம்மாற்றம்

டாக்டர் G குமரேந்திரன் அவர்களின் மருத்துவமனை தற்போது 189, குருசோல்ற் றோட் (பெரிய மாதா கோயிலுக்கு அண்மையில்) சுண்டுக்குளியில் இயங்குகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

டாக்டர் G. குமரேந்திரன்
(R- 1210)

# S.L.E.A.S
(OPEN & LIMITED)

**துரித பயிற்சி வகுப்புகள்**

(இத்துறையில் அனுபவமிக்க விரிவுரையாளர்களால்)
பாடங்கள்
1) நுண்ணறிவு
2) கிரகித்தல்
3) கல்வி நிர்வாகம் பற்றிய நிகழ்வுக் கற்கை


**ஆரம்பம் 30-03 91 8-30 மணி**

பதிவுக்கட்டணம் 250/-

★ LIMITED NUMBER IN EACH BATCH
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ இலவச அச்சடித்த மாதிரி வினா விடைகள்

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
16, 3rd cross street
JAFFNA.
(B- 2201)

## கண்ணீர் அஞ்சலி



**வீரவேங்கை கஸ்ரோ**
நடேசப்பிள்ளை செந்தூரன்
(யாழ். மத்திய கல்லூரி 90ஆம் ஆண்டு வணிக மாணவன்)

தாயின் மடியில்: 08-11-1971
தாயக மீட்சியில்: 21-03-1991

சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதலின்போது வீரமரணமடைந்தார். இவருடன் மறைந்த வீரவேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்!

18, பெருமாள் கோவில் தெற்கு வீதி, யாழ்ப்பாணம்.
அப்பா, அம்மா, தங்கை, தம்பி, உற்றார், உறவினர், நண்பர்கள்.
(R - 1213)

## 3 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



**வீரவேங்கை தனேந்திரன்**
(சவரிப்பிள்ளை அன்ரன் கிறிஸ்ரினோல்ட்)
மேரிதாஸ்

மலர்வு 1967- 12- 11
உதிர்வு 1988- 03- 27

செந்தமிழ் ஈழமாம்
செவ்விதோர் நாட்டிலே
வந்திடு மீண்டுமோர்
வலியநல் வேங்கையாய்!

மாரீசன் கூடல், இளவாலை.
பாசத்துடன் பெற்றோர், உடன் பிறப்புக்கள்.
(R-1195)

## நினைவு கூருகின்றோம்

**மார்ச் 27**

1985 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
❋ **பாக்கியன்** (சோமநாதன் பாக்கியராசா -காரைதீவு)

1986 ஆம் ஆண்டு பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய திடீர்த் தாக்குதலின் போது வீரமரணமடைந்த
**கார்த்திக்** (க. ஜெயந்தன், முள்ளியவளை)

1988 ஆம் ஆண்டு பாலக்காட்டில் உலங்கு வானூர்தியின் திடீர்த்தாக்குதலின் போது வீரமரணமடைந்த
**கப்டன் தீபன்** (கந்தையா தவராசா சந்திவெளி)

இதே ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**தனேந்திரன்** (சவரிப்பிள்ளை கிறிஸ்ரினோல்ட் -இளவாலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்கூறிய மாவீரர்பாக்கியன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி
(B-2186)

## ✿ சிந்தனைக்கு ✿

கடுமையாக உழைக்க ஆற்றலுடனும் ஆயத்தமாகவும் முன் வருவதே உயர்ந்த மேதை.

— றாபர்ட் மெக் ஆர்தர்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 27-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# பேராசிரியரின் இழப்பு பேரிழப்பாகும்

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் சோ. கந்தையாவின் மறைவு யாழ் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமல்ல தமிழ்ச் சமுதாயத்திற்கே பேரிழப்பாகும். மக்கள் படும் இன்னல்களில் பங்கு கொள்ளாது அந்நிய நாட்டில் சேவகம் செய்ய படித்தவர்கள் ஓடிக் கொண்டு இருக்கையில் எமது மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் சேவை செய்ய முன்வந்த பேராசிரியரின் இழப்பு குறைத்து மதிப்பிடக் கூடியதொன்றல்ல.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கல்வித்தரம் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சி அடைந்து வருவதாக உயர் கல்வித்துறை பற்றி ஆய்வு செய்த சில புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர். இதற்கு உயர் கல்வித் தகைமை பெற்ற பேராசிரியர்கள் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறுவதே காரணம் எனவும் தெரிவித்துள்ளனர் அத்தோடு பல்போதனா பீடங்களில் 50 வீதமான விரிவுரையாளர்கள் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன இதற்குத் தகுதியானவர்கள் இலங்கையில் இல்லை குறைந்த தகுதியுள்ளவர்களே நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதுவே பல்கலைக்கழகங்கள் வீழ்ச்சி அடைவதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

பல்கலைக்கழக தரம் வீழ்ச்சி அடைகின்றன என்ற புத்திஜீவிகளின் கருத்துக்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளக் கூடியது தான் ஆனால் திறமைசாலிகள் வெளியேற்றத்திற்கு கவர்ச்சிகரமான சம்பளம் இன்மை தான் காரணம் என்பது முழுமையாக ஏற்புடையதல்ல. சம்பளம் கவர்ச்சிகரமாக இல்லை என்பது மூளைசாலிகள் வெளியேற்றத்திற்கு ஒரு காரணமாக இருப்பினும் சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாதப் போக்கே இலங்கைப் பல்கலைக் கழகங்களின் தரவீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகும்.

பல்கலைக்கழக அனுமதியில் சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடித்த தரப்படுத்தல் முறை திறமையானவர்களைப் பல்கலைக் கழகம் செல்லாமல் தடுத்து அதே போன்று இனரீதியான பாகுபாடு நியமனங்கள் திறமைசாலிகளை பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேற்றியது கடந்த காலத்தில் இதை விட மிகக் குறைந்த சம்பளத்திலும் வசதிகள் அற்ற நிலையிலும் சேவை புரிந்தவர்கள் தற்பொழுது சேவை செய்ய முன்வராமைக்கு சம்பளம் மட்டுமல்ல இவ்வாறான அரசின் நடவடிக்கைகளுமே காரணமாகும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் தரவீழ்ச்சி தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளவை யாழ் பல்கலைக் கழகத்திற்கும் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கும் பொருந்துமாயினும் ஏனைய பல்கலைக்கழகங்களின் நிலைமைகளில் இருந்து இப் பல்கலைக்கழகங்கள் நிலை சற்று வேறுபட்டதாகும்.

இலங்கையின் ஏனைய பகுதி பல்கலைக்கழகங்களைப் போன்று யாழ். பல்கலைக்கழகமும் மட்டக்களப்பு பல்கலைக்கழகமும் சிறிலங்கா அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீட்டில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன, இதன் காரணமாக இப்பல்கலைக் கழகங்களின் விருத்தி குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்பட்டுவந்தன.

மேலும் வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் யுத்தத்தைத் தொடர்ந்து பெருமளவில் 'புத்திஜீவிகள்' இங்கிருந்து வெளியேறிவிட்டார்கள் சில துறைகளில் சிரேஷ்ட மாணவர்களே விரிவுரைகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையில் இப்பல்கலைக் கழகங்களின் தரவீழ்ச்சி தவிர்க்க முடியாததாகின்றது.

இந்த நிலையில் பேராசிரியர் கந்தையாவின் இழப்பு உடன் ஈடுசெய்ய முடியாததுதான். புதிதாக நியமனம் பெற்ற உள்ளக பயிற்சி வைத்தியர்களே யாழ் போதனா வைத்தியசாலையில் சேவை செய்ய முன்வராத இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு சைக்கிளில் சென்று சேவை செய்ய முன்வந்தமையில் இருந்து பேராசிரியர் கந்தையாவின் சேவை உணர்வு வெளிப்படும். இவ்வாறான பேராசிரியர் ஒருவரின் மறைவானது தமிழ்ச்சமுகத்திற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு என்றால் அது மிகையாகாது.

# பிரேமதாஸாவின் பாதுகாவலரும் இஸ்ரேலினால் பயிற்றப்பட்டவரே

— ரவி ஜெயவர்த்தனா

(கொழும்பு)

"சிறிலங்காவின் இன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மெய்க்காப்பாளர் பிரிவும் இஸ்ரேல் குழுவினால் பயிற்சி அளிக்கப்பட்டவர்களே" என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

மொஸாட் அதிகாரிகளை ஆட்குதலும் அழித்தலும் எனும் தலைப்பிலான புத்தகத்தில் அடங்கியுள்ள இலங்கை தொடர்பான விடயங்களை ஆராய நிறுவிய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணையில் சாட்சியமளித்த ரவி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

தொடர்ந்து சாட்சியமளித்த ரவி ஜெயவர்த்தனா குறிப்பிடுகையில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு திறக்கப்பட்டதும் அதிரடிப்படையினரைச் சேர்ந்த பலர் பயிற்சிக்காக இஸ்ரேல் சென்றனர். அத்துடன் மெய்க்காப்பாளர் பிரிவுக்கு பயிற்சி வழங்க 1987 ஆம் ஆண்டு இஸ்ரேல் குழுவொன்று இலங்கை வந்தது. இன்றைய ஜனாதிபதியின் மெய்க்காப்பாளர் பிரிவு அவ்வேளை மேற்படி குழுவினரால் பயிற்றப்பட்டனர்.

1984 ஆம் ஆண்டு நான் இஸ்ரேல் சென்ற பொழுது அந்நாட்டு பிரதமரைச் சந்தித்தேன். பொது எதிரியை முறியடிப்பதற்காக சகல உதவிகளையும் வழங்குவதாக அவர் உறுதியளித்தார். ஏன் அந்த உதவிகளைப் பயன்படுத்தக் கூடாது, அதற்காகவே பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டு திருமதி பெனிஜெயவர்த்தனாவும், திருமதி லிஜயமானாவும் இஸ்ரேல் சென்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்ற விமான குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகளுக்கு உதவி செய்ய இஸ்ரேல் உயர் மட்டக் குழுவொன்று இலங்கை வந்தது என்றும் தெரிவித்தார்.

இஸ்ரேல் செல்லும் பாதுகாப்பு படைவீரர்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் எனக்கு இருக்கவில்லை. எனது கடமை பாதுகாப்பு ஆலோசனை மட்டுமேயாகும்.

தேசிய புலன் ஆய்வு பிரிவு 'எமியா' விற்கு கொடுத்த பற்றாசன விருந்திற்கு குறிக்கப்பட்ட விருந்தினர்கள் அழைக்கப்பட்டனர். அதில் நானும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ஆட்டிகலையும் கலந்து கொண்டோம் எனத் தொடர்ந்து தனது சாட்சியத்தில் ரவி ஜெயவர்த்தனா குறிப்பிட்டார்.

# செய்தித் தகவல் மையத்தில் வேலை வாய்ப்புள்ளது

(கோப்பாய்)

செய்தித் தகவல் மையத்தால் வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழில் நன்கு எழுதக் கூடிய குறித்த ஒரு விடயத்தை கருத்தில் எழுதும் திறனுடையவர்கள் பொது உயர் தரம் படித்தவர்கள் இவ் வேலைக்கான தகுதி பெற்றவர்கள்.

இந்த விண்ணப்பங்களை தமது சொந்தக் கையெழுத்தில் எழுதி நேரிலோ அல்லது தபால் மூலமோ 03-04-91 க்கு முன்னர் நிர்வாகி, செய்தித் தகவல் மையம், கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். இந்த விண்ணப்பங்களின் இடதுபக்க மூலையில் "வேலைவாய்ப்புக்கான விண்ணப்பம்" என எழுதப்படுதல் வேண்டும்.

இதற்கான நேர்முகப் பரீட்சை 05-04-91 இல் நடைபெறும் என்றும் வயது, கல்வித் தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் குறிக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் கிராமசேவை அலுவலர் மாவீரர் குடும்பத்தினராயின் தமது பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி பிரதேசப் பொறுப்பாளரின் சிபாரிசுக் கடிதத்துடனும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தினராயின் கிராம சேவை அலுவலரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதமும் மேற்குறிப்பிட்ட பத்திரங்களோடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### தேர்தல் பிரசாரத்துக்கு

# அரசாங்க வசதிகளைப் பயன் படுத்தத் தடை

(டில்லி)

இந்திய லோக்சபா தேர்தல் பிரசாரத்திற்காக அரசாங்க வசதிகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அதேவேளை பிரதமர் சந்திரசேகருக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இந்திய தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதியில் இருந்து தேர்தல் பிரசாரத்திற்காக அரசாங்கத்தின் அனைத்து வசதிகளைப் பயன்படுத்துவதன் மீதான தடையும், அமைச்சர்கள் மேற்கொள்ளும் தேர்தல் சுற்றுப்பயணங்களில் விமானங்கள் உட்பட அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்துவதன் மீதான தடையும் அமுலுக்கு வருகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் பிரதம மந்திரியின் விடயத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தடை விலக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தி.மு.க தனி அறிக்கை

தமிழ் நாடு சட்டப் பேரவைத் தேர்தல் தொடர்பாக ஒரு தனியறிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிடுமென அதன் தலைவர் மு. கருணாநிதி நேற்றுச் செய்தியாளரிடம் தெரிவித்தார். தேர்தல் அறிக்கை அடுத்த மாதம் 2-ஆம் வாரமளவில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் ஏப்ரல் 14-ம் திகதி டெல்லியில் நடக்கவிருக்கும் கூட்டத்தில் தான் பங்கு பற்றப் போவதாகவும் கருணாநிதி தெரிவித்தார். தோழமைக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு காணும் வகையில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

# இந்திய சீன நட்புறவு அமைதியை ஏற்படுத்தும்

— லீபெங்

(பீஜிங்)

"சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான நீடித்த உறுதியான நட்புறவுகள் ஆசியப் பிராந்தியம் முழுவதிலும் அமைதியையும், உறுதிப்பாட்டையும் அளிக்கும்" என சீனப் பிரதமர் லீபெங் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பீக்கிங்கில் இந்திய மக்கள் காங்கிரசின் நான்காவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசிய லீபெங் சீன இந்திய உறவுகள் கணிசமான அளவு மேம்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

இந்த உறுதியான நட்புறவுகள் இருநாட்டு மக்களின் அடிப்படை நலன்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் ஆசியப் பிராந்தியம் முழுவதிலுமே அமைதியையும், உறுதிப்பாட்டையும் அளிப்பதாக இருக்கும் என்றும் கூறினார்.

# காங்கிரஸுடன் பேசப்போவதாக சுவாமி மிரட்டல்

(கோவா)

"ஜனதாக் கட்சி, ஜனதா தள் எஸ் கட்சியுடன் இணைவது ஏப்ரல் முதல் வாரத்திற்குள் பூர்த்தியாகாவிட்டால் அது இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொள்ளும்" என்று ஜனதாக் கட்சித் தலைவரும் பிரதமர் சந்திரசேகர் அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சருமான சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

தேர்தல் உடன்பாடு குறித்த ஏப்ரல் மாதத்திற்கிடையில் தீர்மானம் எடுக்கப்படாதபட்சத்தில் இந்திரா காங்கிரஸுடன் தேர்தல்கூட்டு அமைப்பது தவிர்க்க முடியாததாகி விடும் என்றும் சுவாமி தெரிவித்தார்.

# இந்தியாவுடன் நல்லுறவு; பேகம் காலிதாஸியா விருப்பம்

பங்களாதேஷ் பிரதம மந்திரி பேகம் காலிதா ஸியா தனக்குக் கிடைக்கவிருக்கும் அரசாங்க வதிவிடம் அனைத்தையும் வங்கி நிறுவனமொன்றுக்கு வழங்கவுள்ளார்.

நேற்று முன்தினம் டாக்காவில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய பேகம் காலிதா ஸியா இந்த அறிவித்தலை தெரிவித்தார்.

அத்துடன் தமது அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள ஆர்வம் கொண்டுள்ளது என்றும், இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி கங்கை நீரை பகிர்ந்து கொள்ளுதல் குறித்து முடிவு எடுக்கவுள்ளதாகவும் காலிதா ஸியா தெரிவித்தார்.

# வளைகுடாவில் நிரந்தர படை அணி வைத்திருக்க அமெரிக்கா முடிவு

(வாஷிங்டன்)

வளைகுடாவில் அமெரிக்கப் படைகள் ஒரு அணியை நிரந்தரமாக தங்க வைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் தமது படையணி ஒன்று நிரந்தரமாக இருக்க வேண்டுமென அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இதுபற்றிக் கூறிய வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் பல நூறு இராணுவ வீரர்களைக் கொண்ட படையணி ஒன்று வளைகுடா வட்டாரத்தில் உள்ள ஒரு தளத்தில் நிறுத்தி வைக்கப்படுவர்; வளைகுடாவில் அமெரிக்க கடற்படை 40 வருடங்களாக நிலை கொண்டிருந்தாலும் இராணுவம் நிறுத்தி வைக்கப்படுவது இதுவே முதல்தடவையாகும். புளோரிடா இராணுவ தளத்திலிருந்து இதற்கான இராணுவ அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

அதேவேளை குவைத்தினை ஈராக் ஆக்கிரமிக்க முன்பு வளைகுடாவில் எவ்வளவு இராணுவம் இருந்ததோ அதே அளவுக்கு படை பலம் குறைக்கப்பட வேண்டுமென்று சோவியத் யூனியன் கூறியுள்ளது. வளைகுடாவில் காவற்பணிக்கு ஐ.நா. தலைமையிலான கூட்டுப்படை அனுப்பப்பட வேண்டுமென சோவியத் யோசனை கூறியுள்ளது. அதனுடன் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படுவதை வளைகுடாவில் தடைசெய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. ஆனால் அரபு நாடுகள் இஸ்ரேலின் அணுவாயுத உற்பத்தித் திறனையும் கவனத்தில் கொண்டுதான் எந்த வட்டாரப்பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

## தீ விபத்தில் சிக்கிய இரு இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீவிபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூவரில் இருவர் மரணமடைந்துள்ளனர். ஒருவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

கடந்த 23ஆம் திகதி இரவு சாவகச்சேரிப் பகுதியில் பஸ்ஸில் எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்தபோது அருகிலிருந்த விளக்கு தவறுதலாகத் தட்டுப்பட்டதால் உடனடியாகத் தீப்பற்றிக்கொண்டது. இதனால் மூவரும் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தபோதிலும் நேற்றுக்காலை சிறீகாந்தன் (வயது 22 திருமலை), கதிரவேலு (வயது 18 சாவகச்சேரி) ஆகியோர் மரணமடைந்தனர் கிருஷ்ணபாலன் (வயது 22 ஆனைவிழுந்தான்) இவருக்கு உடல் முழுவதும் எரிகாயங்கள் காணப்படுகின்றன. இவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளது. (ச)

---

ஆயர் மீதான

தில் கீழ்கண்ட விதம் தெரிவித்துள்ளனர்:

''வன்முறைகள் படிப்படியாக வளர்ந்து கத்தோலிக்கத் திருச்சபை ஆயரில் ஒருவரும், ஆயர் பேரவையின் துணைத் தலைவரையுமே ஆயுதப்படையினர் தாக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளமைக்காக ஆழ்ந்த கவலையும், மனவருத்தமும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேற்படி சம்பவம் சாதாரண பொதுமக்கள் மீது படையினர் தொடர்ச்சியாக இழைத்துவரும் துன்பங்களுக்கு ஒரு உதாரணமாகவும் எடுத்துக் கொள்ளீர்களென்றும் நம்புகிறோம்.

இவ்வாறு யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற மறைமாவட்ட குருக்கள் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. (21)

---

100 தங்க

சிறிநிவாசன் ராமச்சந்திரா என்ற இந்த நபர் தான முன்பும் இரு தடவைகள் தங்கம் கடத்தியதாகவும் பிடிக்கப்பட்ட தங்க பிஸ்கட்டுகள் பாஸா என்பவருக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் புலன் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

சிறிநிவாசன் UL 303 பிரயாண இலக்க எயர் லங்கா விமானத்தில் சிங்கப்பூரிலிருந்து வெள்ளியன்று கொழும்பு திரும்பியிருந்தார்.

சுங்கப்பகுதியினரால் பிடிக்கப்பட்ட ரூபா 210 இலட்சம் தங்கத்தைஇவரால்கட்ட முடியாது போகவே இவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் பாஸாவைக் கண்டுபிடிப்பதில் பொலிஸ் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

---

பரீட்சார்த்திகள்

ளையும் கேட்டுள்ளார்.

பரீட்சை அனுமதிக்கான தஸ்தாவேஜுகள் சில பற்றாக்குறையாக இருந்தாலும் சமயோசித ஒழுங்குகளைச் செய்து பரீட்சார்த்திகளைப் பரீட்சைக்கு இருக்க அனுமதிக்குமாறு பரீட்சை ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

## தொழிலாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் நேற்றுக் காலை மரணமானார்.

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்தபோது கடந்த 14 ஆம் திகதி பலகை தடக்கி விழ்ந்த கந்தசாமி குகன் (19 வயது கரவெட்டி) என்ற தொழிலாளி தலையில் பலத்த காயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் நேற்றுக்காலை இவர்மரணமடைந்தார். (ச)

## ஆர்வமுள்ளோர் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழிற் பயிற்சித் திட்டத்திற்கென பெயர்களைப் பதிந்து கொண்டோரும், இதில் இணைவதற்கு ஆர்வமுள்ளோரும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவன தலைமைப் பணியகத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## சாவி மோதி மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சந்தையில் வேகமாக வந்த இரண்டு சாவி மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் மூவர் பலத்த காயமடைந்தனர்.

நேற்று மாலை இரண்டரை மணியளவில் இடம் பெற்ற இம் மோதலில் எம். மருது (வயது 32)சுன்னாகம் எஸ் தங்கராஜா (வயது25) சுன்னாகம் ஆண்டன் அலோசியஸ் (வயது 30,சுன்னாகம் ஆகிய மூவருமே காயமடைந்தோராவர்.

இந்த மூவரில் தங்கராஜாவும் மருது என்பவரும் தலையில் பலத்த காயமடைந்ததால் வாய் மூக்கு காது ஆகியவற்றால் இரத்தம் ஓடிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (லோ)

---

சிறிலங்கா

சாதனம் இல்லாமையால்தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது என்று கூறும் லக்ஷ்மன் அவசவாகனம் புலிகளின் நிலக்கண்ணிவெடியில் சிக்கியதாகக் கூறி அரசாங்கம் மறைக்கப் பார்க்கிறது என்று தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விமானப்படை இரகசியமாக ஒரு விசாரணையை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கைச்சாத்திட அமெரிக்கா மறுப்பு

(வாஷிங்டன்)

அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது. சோவியத் யூனியன் கடந்த நவம்பரில் கைச்சாத்தான படைக்குறைப்பு ஒப்பந்தத்தில் தந்திரமான மாற்றங்களைச் செய்துள்ளதாக குற்றஞ்சாட்டும் அமெரிக்கா, சோவியத் யூனியனின் இராணுவத் தளபதிகளின் செல்வாக்கு மேலோங்கியிருப்பதாகவும் கொர்பசேவ் இராணுவத் தளபதிகளிடம் எதிர்த்துப் பேச முடியாத நிலையிருப்பதாகவும் கருத்து வெளியிட்டுள்ளது.

---

அஞ்சலி

அவர்களின் திடீர் மறைவு தமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், அன்னாரின் இழப்பு பல்கலைக் கழகத்திற்கும் தமிழீழ மக்களிற்கும் பேரிழப்பாகும் எனவும் யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (மு)

---

மட்டக்களப்பு

வந்தனர். இவர்களுக்கு அண்மையில் இலவச புத்தகம் வழங்கப்படும் இருந்தது. திடீரென அகதிகளுக்கு இலவசப் புத்தகம் வழங்கப்படுவதில்லை எனக்கூறி புத்தகங்களைப் பறித்துக் கொண்டு மாணவர்களை விரட்டி விட்டாராம்.

---

ஏழு தமிழர்

பாலி பெண் உட்பட இருவரை சுட்டுக் கொன்றுள்ளனர். அன்ரனி நாகம்மா (வயது37) உப்போடை, பொன்னம்பலம் இரத்தினம் (வயது 28, வெருகல் முத்துவாரம், ஆகியோரே இராணுவத்தால் கடற்கரையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டோராவர்.

## மாலியில் சர்வாதிகாரி ஆட்சி கவிழ்க்கப்பட்டது

(லண்டன்)

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் இராணுவ சர்வாதிகாரிக்கு எதிரான போராட்டம் வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு நாட்களாக அங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர் அந்த நாட்டு ஜனாதிபதி மூசா் ராவோரவை இராணுவத்தினர் கைது செய்திருப்பதாய் ஊர்ஜிதம் ஆகாத செய்திகள் தெரிவிக்கின்றன

அந்த நாட்டின் தலைநகர் பாமாகோவை துருப்புக்கள் தங்கள் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக பிரான்சிய ஏஜன்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

பாரதீய ஜனதாவுடன்

## கூட்டு உள்ளோருடன் கூட்டு எதுவும் வையோம் ஜெயபால்ரெட்டி

(டில்லி)

பாரதிய ஜனதாக் கட்சியுடன் உடன்பாடு வைத்துக் கொள்ளும் எந்தக் கட்சியுடனும் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ளமாட்டோமென ஜனதா தள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெயபால்ரெட்டி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் ''எந்தக் கட்சியுடனும் ஜனதா தள் தேர்தல் உடன்பாடு வைத்துக்கொள்கிறதா'' என்ற நிருபர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதேவேளை ஹரியானா சட்டப் பேரவை கலைக்கப்படுமா என்று கேட்டபோது ஹரியானா முதலமைச்சர் ஓம் பிரகாஷ் சௌதாலா தமக்கு உள்ள பெரும்பான்மை வலுவை நிரூபித்துக்காட்டும்வரை ஜனாதிபதியிடம் சட்டப் பேரவையைக் கலைப்பதற்கு பரிந்துரைக்க முடியாதெனத் தெரிவித்தார்.

## யாழ். பல்கலைக்கழகத்திற்கும் நிவாரணம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இலவச உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் யாழ் அரச அதிபர் ஊடாக புனர்வாழ்வு அமைச்சுக்கு கடிதம் அனுப்பிஉள்ளது

யாழ். மாவட்டத்தில் தற்போது அத்தியாவசிய பொருள்களை பெறுவதில் மிகவும் கஷ்டநிலை காணப்படுவதால் குறிப்பிட்ட ஒரு தொகை உணவுப்பொருள்களையாவது தமக்கு நிவாரணமாக வழங்கி உதவுமாறு இக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டதாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்தார். (லோ)

---

கண்ணிவெடியில்

கொண்டிருந்தசமயம் அம்முகாமிலிருந்து ஒருமைல் தொலைவில் வைத்து விடுதலைப்புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் ஒரு ட்ரக் வண்டி சிதறியது, பல இராணுவத்தினர் இறந்திருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது ஆனால் சேதவிபரம்பற்றி ஏதும் தெரியவரவில்லை.

விடுதலைப்புலிகளின் இத்தாக்குதல் சம்பவத்தை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

## படுகாயம்

பாடசாலை விட்ட பின்பு பாதிவழியில் மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏற முயன்ற சிறுவன் படி உடைந்து விழ்ந்ததில் தலையில் பலத்த காயத்திற்கு உள்ளானான். யேசுதாசன் டென்மன் (18) என்பவரே படுகாயம் அடைந்தவராவர்.

---

இலங்கைத் தமிழர்

பொலிசாரிடம் சிக்கியுள்ளனர். வீட்டையும், வளவையும் ஈடுவைத்து பிரயாண முகவருக்குப் பணம் செலுத்தியதாக தமிழ் இளைஞர் ஒருவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தண்டனைக்காலம் முடிந்ததும் இருவர்கள் உட்பட ஏனைய மூன்றுபேரும் நோர்வேயிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா நாகலிங்கம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சின்னம்மா நாகலிங்கம் காலமானார். இவர் பொன்னையா செல்லம்மாவின் அன்பு மகளும், நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உலகநாதன், லெட்சுமி, தம்பிராசா, சண்முகம், சரஸ்வதி, கனகரெத்தினம், தெய்வேந்திரம், காலஞ்சென்ற பரமசாமி, பரமேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஐஸ்வரி, துரைராஜா, கமலேஸ்வரி, புனிதவதி, கனகரெத்தினம், செல்வராணி, தனலெட்சுமி மங்கையர்க்கரசி, சிறிசந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அம்மம்மா, தம்பிப்பிள்ளை, காசிப்பிள்ளை, அருளம்பலம், சுந்தரம்பிள்ளை, தங்கமுத்து, வேலாயுதம்பிள்ளை, பொன்னம்மா, நல்லதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்ற பின்னர் தகனக்கிரியைக்காக புதன்கிழமை (27-03-91) இன்றுகாலை 10 மணிக்கு மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புங்குடுதீவு. தகவல்:
(R-1212) நா. கனகரெத்தினம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.